# சோழா நிறுவனம் ஓலா ஒப்பந்தம்

சென்னை, ஜூலை 13:

முருகப்பா குழுமத்தின் நிதிசார் சேவைகளுக்கான நிறுவனமான சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அன்ட் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட் (சோழா), தனிப்பட்ட போக்குவரத்திற்கான இந்தியாவின் மொபைல் செயலி (ஆப்) நிறுவனமான ஓலாவுடன் தங்கள் ஒத்துழைப்பு உறவை அறிவித்திருக்கிறது.

ஓலா செயல்தளத்தில் இணைந்திருக்கும் கார் ஓட்டுநர்களுக்கு கார் கடன்களை வழங்குவதும் மற்றும் சம மாதத்தவணை என்ற நடப்பு நடைமுறைக்கு பதிலாக தினசரி கடன் தொகையை திரும்ப செலுத்தும் விருப்பத்தேர்வு அடங்கிய திட்டத்தை வழங்குவதும் இதன் நோக்கமாகும்.

இந்த ஒத்துழைப்பு உடன்பாடு குறித்து பேசிய சோழா நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் வெள்ளையன் சுப்பையா கூறுகையில்,

'ஒரு சிறந்த வாழ்க்கையில் காலடி எடுத்து வைப் பதற்காக எமது வாடிக்கையாளர் களுக்கு புதிய எல்லைகளை உருவாக்குவது மீது சோழாவில் உள்ள நாங்கள் நம்பிக்கை கொண்டி ருக்கிறோம்.

இந்த உடன்பாட்டின் வழியாக தங்களது வாகனங்களை சொந்தமாக கொண்டிருக்க வேண்டு மென்றும் மற்றும் தங்களது தினசரி வருவாய் வழியாக கடனை திரும்ப செலுத்த வேண்டுமென்றும் விரும்பு கிற ஓட்டுநர்களுக்கு ஆதரவு வழங்குவதை நாங்கள் ஆவலோடு எதிர் நோக்குகிறோம் என்றும் கூறினார்.